# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 17.11.2020**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
மாநிலத் தகவல் ஆணையர்

……………

**வழக்கு எண். NC480/F/2020 (SA 7629/F/2019)**

**திருமதி. D. விஜயலட்சுமி … மேல்முறையீட்டாளர்**

**எதிர்**

**பொதுத் தகவல் அலுவலர் /**
**செயற்பொறியாளர்/மையம்/மாநகர்,**
**தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,**
**எண்.27, அப்துல் ரஹீம் ரோடு,**
**ரேஸ் கோர்ஸ்,**
**கோயம்புத்தூர் – 641 018. … பொது அதிகார அமைப்பு**

பார்வை :-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 10.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் – பிரிவு 19(1) | 09.07.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு – பிரிவு 19(3) | 30.07.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 28.11.2019 |
| ஆணைப் பெறப்படாத மனு நாள் | 29.01.2020 |

******

## ஆணை

**இவ்வழக்கு ஏற்கனவே 28.11.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை இரு வார தினங்களுக்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் முழுமையான தகவல் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திருமதி. D. விஜயலட்சுமி, கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. M. வைதீஸ்வரன், பொதுத் தகவல் அலுவலர் / செயற் பொறியாளர், மையம் /மாநகர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.**

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 10.05.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், கோவை மாநகர வீதியில் 002-006-0139, 002-006-0147 ஆகிய இரண்டு மின்இணைப்புகளும் விதிமுறைகளை பின்பற்றாமல் வீடு இடிக்க ஏதுவாக மின் இணைப்புகளை அகற்றியதற்கான காரணத்தை கேட்டு கடந்த 10.05.2010 அன்று மனு செய்ததாகவும், அதற்கு 13.03.2010 அன்று களப்பணி மேற்கொண்டபோது தகவல் வந்ததின்பேரில் மின்இணைப்புகளை அகற்றியதாக கோரியுள்ள நிலையில் தனக்கு கீழ்க்கண்ட தகவல்களை வழங்குமாறு கேட்டு, பொதுத் தகவல் அலுவலர் / செயற் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கோயம்புத்தூர் மாவட்டம் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார் :-

1) மேற்கூறிய களப்பணிக்கான உத்தரவு நகல் வழங்கிடக் கோரியும்;
2) மேற்கூறிய களப்பணியில் யார் யாருக்கு என்னென்ன பணிகள் ஒதுக்கப்பட்டது என்ற விபரம்?
3) மேற்கூறிய களப்பணியின்போது, தனது வீட்டை இடித்து கொண்டிருப்தாக தகவல் கூறியது யார்? அவர் நேரில் அல்லது தொலைபேசியில் தெரிவித்திருந்தால் அவரது தொலைபேசி எண். மற்றும் பெயர் பற்றிய விபரம்?
4) களப்பணியில் இருந்தபோது வீடு இடிக்கும் தகவல் யாரிடம் தெரிவிக்கப்பட்டது அவரது பெயர் தரவும்;
5) வீட்டிற்குள் நுழைந்து மின்மானியை அகற்றிய நபர்களின் பெயர், அகற்ற உத்தரவிட்ட அதிகாரியின் பெயர் மற்றும் மின்மாணி தற்சமயம் எங்கு உள்ளது? அதை பாதுகாப்பாக வைப்பது போன்றவற்றிற்க்கான உத்தரவு நகல் தரவும்;

3. பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் 10.06.2019 தேதியிட்டு தகவல் அளித்துள்ளார். மேல்முறையீட்டாளர் அவர்கள் தான் கோரிய தகவல் முழுமையாக தனக்கு வழங்கப்படவில்லை என்றும், அவற்றை வழங்கக் கேட்டும், 09.07.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் 17.07.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளார். மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களுக்கு தனக்கு முறையான தகவல்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்றும், அவற்றை பெற்று வழங்கவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 30.07.2019 தேதியிட்ட மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 28.11.2019 அன்று விசாரணை மேற்கொண்டு SA7629/F/2019 ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 15 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 29.01.2020 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (17.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின்போது ஆஜரான மேல்முறையீட்டாளர், பொதுத் தகவல் அலுவலர் தனக்கு உரிய தகவல் வழங்கவில்லை என்றும், முழுமையான தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும் ஆணைப் பெறப்படாத மனுவில் ஆணையத்திடம் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கோரப்பட்ட தகவல்களுக்கு முழுமையான மற்றும் விரிவான தகவல்களை வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு அளிக்கப்பட வேண்டிய களப்பணி உத்தரவு நகல் மற்றும் அது தொடர்பான தற்போதைய நிலை குறித்த தகவல்களையும் முழுமையான விரிவான அறிக்கையினையும், முழுமையான தகவல்கள் வழங்கப்படாமல் உள்ளது தெரிய வருகிறது. உரிய தகவல் வழங்காமல் தாமதமாக தகவல் வழங்கிய அலுவலரை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:

- மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் ஏறத்தாழ 2 வருட காலமாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் ஆணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

- மனுதாரரர்/மேல்முறையீட்டாளர் 10.05.2019 தேதியிட்ட மனுவில் கோரிய களப்பணி உத்தரவு நகல் மற்றும் அது தொடர்பான தற்போதைய நிலை குறித்த தகவல்களையும் முழுமையான விரிவான அறிக்கையினையும், இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். NC480/F/2020 (SA 7629/F/2019)</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>
பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர் /
செயற் பொறியாளர்/மையம்/மாநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
எண்.27, அப்துல் ரஹீம் ரோடு,
ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் – 647 018.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>
திருமதி. D. விஜயலட்சுமி,
எண்.161/83 B. பொன்னுரங்கம் சாலை,
(மேற்கு), R.S. புரம்,
கோயம்புத்தூர் - 641 002.

Copy to: Judgement File / Spare
JE PA / 19.11.2020